IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 167/2021

Deposition of Witness for P.W.4

| | |
|---|---|
| NAME | – லலிதா |
| HUSBAND NAME | – ஈஸ்வரன் |
| VILLAGE | – |
| TALUK | – |
| CASTE | – |
| OCCUPATION | – |
| RELIGION | – |
| AGE | – |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.04.2024.

**Accsued A1 to A4 Present.**

நான் மேல் அரசம்பட்டு தீர்த்தம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.3 எனக்கு தெரியும். அவர் என்னுடைய மருமகள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 26.04.2021 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் வெங்கடேசனின் அப்பா சுப்பிரமணி எங்கள் நிலத்தில் மாடு மேய்த்தார். அதனால் என் கணவர் மாட்டை எங்கள் நிலத்தில மேய்காதீர்கள் என்று கூறினார். அதற்கு வெங்கடேசன் ஏன் அப்பாவை மாடு மேய்க்க கூடாது என்று சொல்கீறிர்கள் என்று என் கணவரிடம் கேட்டார். அதன்பிறகு மாட்டை மேய்காதே என்று ஏன்

எங்களை சொல்கீறிகள் என்று  சொல்லி கொண்டே வெங்டேசன் என்னுடைய கணவரை இத்தோடு ஒழிந்து போடா தேவிடியா பையா என்று  கூறி மரக்கட்டையால் என் கணவரின் நெஞ்சின் மீது அடித்தார். அந்த கட்டையை பிடுங்கி பாபு என் கணவரை வயிற்றின் மீது அடித்தார். வல்லரசு என் கணவரின் மார்பின் மீது எட்டி எட்டி உதைத்தார். தரணி கையால் என் கணவரின் வயிற்றில் குத்தினார். வசந்த் என் கணவரின் நெஞ்சின் மீது காலால் மிதித்தார். என் பெரிய மகன் வடிவேலு அவர்களை தடுத்தார். அப்போது வெங்டேசன் என் மகன் வடிவேலுவின் இடது முழுங்கையில் கட்டையால் அடித்தார். மற்ற நால்வரும் சேர்ந்து என் மகனை உடம்பின் மீது அடித்தார்கள். என் மகன் கீழே விழுந்து விட்டார். என் இரண்டாவது மருமகள் என் இரண்டாவது மகனுக்கு தொலைபேசி செய்தார். என் இரண்டாவது மகன் வந்தார். என் இரண்டாவது மகன் ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார். ஆம்புலன்சும் வந்து பார்த்தது. என் கணவர் இறந்து விட்டார் என்று கூறினார்கள். என்னுடைய பெரிய மகனுக்கு அடிப்பட்டதால் குடியாத்தம் அரசு மருத்துமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வந்து வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் ஆஜராகததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

P REVATHY Digitally signed by P REVATHY